**தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மூலதனச் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 527,920 செலவு செய்து மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு அப்பெறுமதியானது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கபடப்பட்டிருந்தது. | உரிய செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமையால் உருவாகிய இந்த நிலைமையானது 2023 ஆம் ஆண்டிலிருந்து சரி செய்யப்படும். | தேவைப்பாட்டினை இனங்கண்டு சரியான செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து செலவு செய்தல் வேண்டும். |

**(ஆ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ACA 4 படிவத்தில் குறிப்பிட்ட இறுதி வைப்பு மீதியினை மீளாய்வாண்டில் அந்த படிவத்தின் ஆரம்ப மீதியுடன் ஒப்பிடும் போது 6000-0-0-16-74 ஆம் இலக்க ஒப்பந்தங்களின் நிறுத்திவைத்தல் பணம் ரூபா 210,989 அதிகரித்தும் 6000-0-0-18-81 ஆம் இலக்க நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கான தற்காலிக நிறுத்திவைத்தல் ரூபா 2,130 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | இந்நிலைமை தொடர்பாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மூலம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகளை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் உப நிறுவனங்களில் தனித்தனியாக நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு தலைமை அலுவலகத்தினால் நாளதுவரையாக்கி பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களம் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படபவில்லை. | திணைக்களத்தின் நிதி கட்டுப்பாடு சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் மூலம் மீளாய்வு செய்யப்படுகின்றது எனவும் அது தொடர்பான அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கிறேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 3,652,371 | மரணமடைந்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 478,872 தொகை, ஓய்வு பெற்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 999,225 தொகை, சேவையை கைவிட்டச் சென்றுள்ள 17 உத்தியோத்தர்களிடமிருந்த ரூபா 932,925 தொகை, மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள 18 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,241,349 தொகையாக மொத்தமாக ரூபா 3,652,371 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவற்றில் ரூபா 1,104,071 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் சம்பந்தமாக உரிய தகவல்களையும் வாரிசுக் காரர்களையும் தேடிக்கண்டுபிடிப்பதிலுள்ள சிக்கல்களின் அடிப்படையில் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றி துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அக்கடனை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது எனவும் ஏனைய கடன் பணத்தை ஓய்வூதிய பணிக்கொடை பணத்திலிருந்தும் ஒழுக்காற்று விசாரணை தீர்மானத்திற்கு இணங்கவும் வழக்கு தாக்கல் செய்வதன் மூலமுல் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 (2) | 35,044,824 | காலாவதியான வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு அல்லது உரிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மூன்று வைப்புக் கணக்குகளுக்குரிய 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 34,820,423 தொகையான 138 வைப்புக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் காலாவதியான வைப்புக்கள் தொடர்பான அரையாண்டு பட்டியலை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 30 நாட்களுக்குள் உரிமை கோரலினை மேற்கொள்ளுமாறு உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் கட்டுநிதி இல்லாமையின் அடிப்படையில் ரூபா 11,020,672 பணத்தை செலுத்துவதற்கு முடியாத நிலைமை உருவாகியுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வைப்பு மீதியை தீர்த்துவைத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின்னவல மிருகக்காட்சி சாலையின் குரங்குத் தீவின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டளவில் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் அந்த வளவிற்கு மிருகங்களை (குரங்குகள்) விடுவிக்காது விளைவற்றுக் காணப்பட்டது. | தற்பொழுது அந்த சரணாலயத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள குரங்களை விசேடமாக பழக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனவும் வெளிநாட்டு குரங்களை விசேடமாக பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு மிருகக் காட்சிசாலைகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. | சுற்றாடலுக்கு மிருகங்களை உட்படுத்தி காட்சிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தினால் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்துடன் ரூபா 176,281,496 தொகையான 06 நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க அந்த நிறுவனம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பெறுகைக் குழுத் தீர்மானத்திற்கு இணங்க அச்செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்தும் இடைநடுலவில் நிறுத்தப்பட்டிருந்த அச்செயற்திட்டடங்களை மீண்டும் புதிய ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக அந்த நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 69,558,270 தொகை ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. அவற்றில் 04 செயற்திட்டங்களுக்காக தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த தொடக்க வேலை முற்பணங்களிலிருந்து (Mobilization Advance) நிறுத்திவைத்தல் பணத்தை செம்மையாக்கியதன் பின்னர் ரூபா 14,360,310 பணம் இன்னும் அறவிட வேண்டியிருந்தது. | தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினாரல் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக வேலை முடிவுறுத்தப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து அறவிடப்பட்ட வேண்டிய பணத்தை நிறுத்திவைத்தல் பணத்திலிருந்தும் செலுத்தப்படாத இறுதி விலைபட்டியல்களிலிருந்தும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ஒரு செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினூடாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையை முன்னிட்டு நிர்மாண நடவடிக்கைகளை கைவிட வேண்டி ஏற்பட்டுள்ளது. | செலவு செய்யப்பட்ட பணத்தை விளைவற்ற செலவாக மாற்றுவதற்கு இடமளிக்காது சரியான தமிட்டத்தினைப் பின்பற்ற வேண்டியதுடன் நிலுவையாக உள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த பின்னவல மிருகக்காட்சி சாலையின் மோதரவத்த வாகன தரிப்பிடத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கை முடிவுறுத்தப்படாது 2020 ஆம் ஆண்டின் போது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்டு வந்திருந்த காவல் நிலையமும் மலசல கூட முறைமையும் காடு வளர்ந்து அழிவடைந்து காணப்பட்டது. | அச்செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உருவாகிய கருங்கற்களை இயந்திரங்களைப் பயன்படுத்தி அகற்றுவதற்கு முடியாத நிலைமையின் அடிப்படையில் செயற்திட்டத்தின் மிகுதி நிர்மாண நடவடிக்கைகள் பரஸ்பர ரீதியாக முடிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள பகுதியில் சிறிய வாகனங்களை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காவல் நிலையத்தையும் மலசல கூட முறைமையையும் சிறப்பாக பராமரித்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கும் பூர்த்திசெய்த பகுதியை பிரயோசனமான முறையில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த பின்னவல மிருகக்காட்சி சாலையின் வண்ணத்துப்பூச்சி ஆராய்ச்சி நிலைய கட்டிடம் மற்றும் மலசலகூட முறைமையின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டிலிருந்து இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததுடன் மலசல கூட முறைமையின் கட்டிடங்களில் காடு வளர்ந்து அழிவடைந்து காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பின்னவல மிருகக் காட்சிசாலையின் வண்ணத்துப்பூச்சு ஆராய்ச்சி நிலைய கட்டிடம் மற்றும் மலசலகூட முறைமையின் மிகுதி வேலைகளை முடிவுறுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மூலதனச் செயற்திட்டத்திற்கான நிதி ஏற்பாடும் கட்டுநிதியும் கிடைக்கும் வகையில் இந்த நிர்மாண நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்திசெய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 17 ஏக்கர்கள் பரப்பளவுள்ள வாகொல்ல ஹேன இல்லையாயின் பின்னலந்த வத்த எனும் பெயரிலான காணி பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு பொறுப்பேற்கப்பட்டு 08 மாத காலங்கள் கடந்திருந்த போதிலவம் காணியின் எல்லைகள் குறிக்கப்பட்டு காணியை பாதுகாப்பதற்கும் உரிய குறிக்கோளை நிறைவேற்றவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அக்காணியின் ஒரு பகுதியினைச் சுற்றி கம்பி வேலி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டினையும் கட்டுநிதியையும் முகாமைத்துவம் செய்து மற்றைய பகுதிகளுக்கு கம்பி வேலியை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியை பாதுகாப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 887 ஆன அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் 163 ஆக இருந்ததுடன் அவற்றில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 06 பதவிகளும் இரண்டாம் மட்டத்திலுள்ள 01 பதவியும் மூன்றாம் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள 156 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கைக்கு இணங்க புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாததனால் மேற்கூறிய பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | பிரமாணங்களுக்கு இணங்கிய வகையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது காணப்படுகின்ற ஊழியர் எண்ணிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக மீளாய்வு செய்து அங்கீகரித்த பதவியணியினை திருத்தம் செய்வதற்கேனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆரம்ப சேவைத் தரத்தினைச் சார்ந்த வெளிக்கள உதவியாளர்கள் பதவியில் 10 மிகைகள் காணப்பட்டன. | வெளிக்கள உதவியாளர் பதவியின் மிகை எண்ணிக்கை தொடர்பாக அடுத்துவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |